**தலைப்பு 333 – கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகம்**

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

தலைப்பு 333 – கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தின் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் பொருண்மையான கணக்கீட்டுக் கொள்கைகளுடன் தொடர்பான தகவல்களும் உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களிற்குரிய குறிப்புக்களுடன் கூடிய 2023 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள், 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்திலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (1) ஆம் பிரிவின் பிரகாரம் கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் உள்ளடங்கிய பொழிப்பறிக்கை 2024 மே 22 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11 (2) ஆம் பிரிவின் பிரகாரம் அலுவலகத்தின் வருடாந்த விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2024 ஆகஸ்ட் 05 ஆம் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154 (6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இவ்வறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

நிதிக்கூற்றுக்கள் 2023 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தின் நிதிநிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கெண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரின் மற்றும் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்புக்கள்**

பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 ஆம் பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்கவும் உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையிலும் நிதிக்கூற்றுக்களை தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிரழ்கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16 (1) ஆம் உபபிரிவின் பிரகாரம் அலுவலகம் வருடாந்த மற்றும் உரிய நேரத்தில் நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடிய வகையில் தமது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும்

பொறுப்புக்கள் தொடர்பாக உரியவகையில் ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 (1) (இ) உப பிரிவின் பிரகாரம் அலுவலகம் நிதிக்கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்று தயாரித்து பேணப்படுகிறது என்பதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்த வேண்டி இருந்ததுடன் இம் முறைமையின் செயற்றிறன் தொடர்பாக காலத்திற்குக் காலம் மீளாய்வொன்று செய்யப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்றிறனாக மேற்கொள்வதற்குத் தேவையான மாற்றங்கள் செய்யப்படுதல் வேண்டும்.

### 1.4 நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்றுக்களிலிருந்து விடுபட்டததாக நியாயமான உறுதிப்படுத்தல் ஒன்றை பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவதே எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர்மட்டத்திலான உறுதிப்படுத்தல் ஒன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தல் ஒன்றல்ல மோசடிகள் மற்றும் தவறுகள் தனியாகவே அல்லது கூட்டாகவே தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்கக் கூடியதாக இருப்பதுடன் அதன் பொருண்மையான தன்மையானது இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளாதார தீர்மானங்கள் தொடர்பாக ஏற்படும் தாக்கத்தின் அடிப்படையில் தங்கியுள்ளது.

இலங்கைக் கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒருபகுதியாக என்னால் தொழில்சார் தீர்ப்புக்கள் தொழில்சார் ஐயப்பாடுகளுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. என்னால் மேலும் ,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்கும் போது மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாகநிதிக்கூற்றுக்கலில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ்கூற்று ஆபத்தினை இனங்காணுதல் மற்றும் மதிப்பீடு செய்வதற்காக சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகள் திட்டமிடப்பட்டு அமுல்ப்படுத்தப்பட்டன. பிழையானதாக காட்டுவதன் காரணமாக இடம் பெறுகின்ற பொருண்மையான பிறழ்கூற்றுக்ளினால் எழும் தாக்கலினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கத்தினை பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு தவறான ஆவணங்களை தயாரித்தல் வேணடுமென்றே விட்டு விடுதல் பிழையாகக் காட்டுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஒன்று ஏற்படுவதற்கு காரணமாகிறது.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயம் ஒன்றை தெரிவித்தல் கருத்தில் கொள்ளப்படாதிருந்த போதிலும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளைத் திட்டமிடும் பெருட்டு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பான விளக்கம் பெற்றுக்கொள்ளப்பட்து.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கபட்டுள்ளதாக மதிப்பீடு செய்தல்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கு அடிப்படையானகொடுக்கல் வாங்கல் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கபட்டுள்ளதாகவும் வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல் மதிப்பீடு செய்யப்பட்டது.

எனது கணக்காய்வில் இனங்காணபட்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 1.5 ஏனைய சட்ட தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6 (1) (ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் இணங்கியுள்ளன,

(ஆ) முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக என்னால் வழங்கப்பட்ட சிபாரிசுகள் அமுல்ப்படுத்தப்பட்டிருந்தன.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 செலவின முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப மதிப்பீட்டிலிருந்து ஏற்பாட்டை பெற்றுக் கொள்ளாது 04 செலவு விடயங்களிற்காக கூட்டுத் தொகை ரூபா 1,349,142 மீளாய்வாண்டில் மீள்நிரப்பு மதிப்பீட்டு ஏற்பாட்டின் மூலம் மற்றும் நி.பி. 66 மூலம் ஏற்பாடு பெறப்பட்டிருந்தது. | வெளிநாட்டு பிரயாணங்களிற்கு மதிப்பீடு செய்யாத போதும் வெளிநாட்டு பயிற்சிக்காக அலுவலர் ஒருவரை அனுப்ப நேரிட்டமை, அலுவலக இடவசதிகளை விரிவாக்கியமை, தேவையான அலுவலக உபகரணங்களை கொள்வனவு செய்ய தேவைான செலவினை மேற்கொண்டமை, நிகழ்நிலை நிதியல்லா சொத்து முகாமைத்துவ தொகுதியை செயற்படுத்த அத்தியவசியமான உபகரணங்களை கொள்வனவு செய்ய நிதிப் பிரமாணம் பிரகாரம் மேலதிக ஏற்பாடு பெற்றுக் கொள்ள நேரிட்டமை. | நிதிப் பிரமாணம் 50 பிரகாரம், மதிப்பீடு தயாரிக்கும் போது சரியாக மற்றும் நடைமுறை சாத்தியமாக தயாரிக்க வேண்டும். |
| (ஆ) | திறைசேரி செயலாளரின் 2023 சனவரி 27 திகதிய இலக்கம் 01/2023 கொண்ட வரவு செலவு சுற்றறிக்கையின் 02 (அ) பந்தியின் கீழ் குறிப்பிட்டுள்ள செலவின விடயங்களிற்காக ஒதுக்கப்பட்ட ஏற்பாட்டை தவிர ஏனைய அனைத்து மீண்டுவரும் செலவுகளிற்கான ஏற்பாட்டின் கூட்டுத் தொகையின் 6 சதவீதத்திற்கு சமமான ஏற்பாட்டு அளவு அல்லது ரூபா 869,967 குறைந்த பட்சம் பதிவழிக்க | சுற்றறக்கையின் 07 (I) (ஆ) பிரகாரம் அத்தியவசிய செயற்பாடுகளை நடாத்திச் செல்ல தேவையான ஏற்பாட்டிற்காக மாத்திரம் மதிப்பீடு தயாரிக்கப்பட்டது. அதன் பிரகாரம், வரவு செலவு சுற்றறிக்கை 01/2023 இன் அறிவுறுத்தல் பிரகாரம் பதிவழிக்க அத்தியவசியமற்ற செலவுகள் இல்லாதிருந்ததால் இயலுமான உச்சவாறு ஏற்பாடு பதிவழிக்க நடவடிக்கை | சுற்றறக்கை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| வேண்டிய போதும், பதிவழித்திருந்தது ரூபா 74,479 தொகை அதாவது 0.5 சதவீத அளவு மாத்திரமென அவதானிக்கப்பட்டது. | எடுக்கப்பட்டது. | |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

அரசாங்கத்தின் அனைத்து சொத்துக்களையும் மத்தியப்படுத்திய ஆவணவாக்கலின் மூலம் அரச சொத்துக்களின் முகாமைத்துவம், சொத்துக்கள் தொடர்பான கிரய முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புச் செய்தல் என்பவற்றை குறிக்கோளாகக் கொண்டு 2017 ஆம் ஆண்டில் இலங்கை பாராளுமன்றத்தினால் அங்கிகரிக்கப்பட்ட பாதீட்டு பிரேரணை ஒன்றின் பிரகாரம் கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகம் தோற்றுவிக்கப்பட்டது. காணி, கட்டிடம், மோட்டார் வாகனங்கள், கப்பல்கள், விமானங்கள், இயந்திரங்கள் முதலியவற்றை உள்ளடக்கிய உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியான அரசாங்கத்தின் அனைத்து சொத்துக்களையும் மத்தியப்படுத்தி ஆவணமாக்குதல் கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகம் நிறைவேற்ற வேண்டிய முன்னணி செயற்பாடாக இனங்காணப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தை தோற்றுவித்து 2023 திசெம்பர் 31 ஆம் திகதியளவில் 06 ஆண்டுகளை விஞ்சியிருந்த போதும், மேலே குறிப்பிடப்பட்ட அனைத்து சொத்துக்களையும் உள்ளடக்கி மத்தியப்படுத்திய ஆவணவாக்கலினை மேற்கொள்வதற்கு கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்திற்கு இயலாதிருந்தது. கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் அலுவலகத்தினால் சொத்துக்கள் தொடர்பாக மத்தியப்படுத்திய ஆவணப்படுத்தல் தொடர்பாக 2023 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிலைமை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| | **கணக்காய்வு அவதானிப்பு** | **கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|---|
| (அ) | அரச நிதியல்லாத சொத்துக்கள் தொடர்பாக மத்தியப்படுத்திய தகவல் தொகுதிக்குரிய தகவல்களை உள்ளீடு செய்ய வேண்டிய 1,773 அரச நிறுவனங்களை (அரச நிறுவனங்கள் மற்றும் பொது முயற்சிகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள்) 2021 திசெம்பர் 31 திகதி இனங்கண்டிருந்த போதும், அலுவலகத்தினால் அந் நிறுவனங்களிற்குரியதாக காணி மற்றும் கட்டிடங்கள் தொடர்பான தகவல்களை தகவல் தொகுதியினுள் நாளாதுவரையாக்கி இருக்கவில்லை. | இந்த மத்தியப்படுத்திய தகவல் தொகுதி நிகழ்நிலை முகாமைத்துவ தொகுதியொன்றின் மூலம் இஸ்தாபிக்க 2017 ஆண்டு முதல் முயற்சித்ததுடன், சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 06/2023 மூலம் 2023.09.01 திகதி முதல் அமுலாகும் வகையில் நிகழ்நிலை நிதியல்லா சொத்து முகாமைத்துவ தொகுதியை (NFAMS) இஸ்தாபித்து 2023.09.01 திகதி முதல் அதன் முதலாவது மொடியுலாக வாகனங்கள் தொடர்பான தகவல்கள் அழைப்பிக்கப்பட்டுள்ளன. | கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தை இஸ்தாபித்த நோக்கத்தை அடைந்து கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | மேலும், 2023 செப்டம்பர் 01 திகதி முதல் நிதியல்லா சொத்து முகாமைத்துவ தொகுதியை (NFAMS) இஸ்தாபித்த போதும், வாகன மொடியுலின் கீழ் அத்திகதியிருந்து மாத்திரம் காப்புச் செய்யப்படும் வகையில் வாகனங்கள் தொடர்பான தகவல்கள் அழைப்பிக்கப்பட்டு இருந்தன. அவ்வாறாயினும் அரசிற்கு சொந்தமான கப்பல்கள், ஆகாய விமானங்கள், புகையிரதம், மக்கள் போக்குவரத்து பேரூந்து வண்டிகள் போன்ற, தகவல் தொகுதியிற்கு உட்படுத்த இது வரை இயலாதிருந்தது. | மேற்படி | விரைவில் தகவல்களை அழைப்பித்து நிதியல்லா சொத்து முகாமைத்துவ தொகுதியை இஸ்தாபிக்க நடவக்கை எடுக்க வேண்டும். |
| (இ) | கணக்காய்விற்கு வழங்கி தகவல்களின் பிரகாரம், 2023 ஆகஸ்ட் 24 திகதியளவில் 699 அரச நிறுவனங்களிற்குரிய வாகனங்கள், கட்டிடங்கள் மற்றும் காணிகள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள இயலாதிருந்தன. | மேற்படி | மேற்படி |
| (ஈ) | கொம்ப்ட்ரோலர் நாயகத்தின் சொத்துக்கள் முகாமைத்துவ சுற்றறிக்கை இலக்கம் 01/2017 மூலம் பொறிகள், இயந்திர உபகரணங்கள், நிர்மாணம், அலுவலக உபகரணங்கள் மற்றும் தளபாடங்களிற்கான தகவல்களை சமர்ப்பிக்குமாறு அறிவித்திருந்த போதும், 2023 திசெம்பர் 31 திகதி வரை எந்தவொறு நிறுவனத்தில் இருந்தும் தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | மேற்படி | மேற்படி |
| (உ) | அரச நிறுவனங்களினால் வாகனம் அல்லாத ஏனைய சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் பராதீனம் செய்தல் தொடர்பான தகவல்கள் அலுவலகத்திற்கு அறிக்கையிடுவதற்கான முறைமையொன்றை 2024 செப்டம்பர் 04 திகதி வரை இஸ்தாபித்திருக்கவில்லை. | NFAMS உள்ளவாரன காலரீதியான தகவல்களை அறிக்கையிடும் நிகழ்நிலை தகவல் தொகுதியொன்று ஆவதுடன் முதலாவது மொடியுலாக வாகன மொடியுல் செயற்படுத்தப்பட்டு உள்ளதுடன் ஏனைய நிதியல்லாத சொத்து மொடியுல்களை படிப்படியாக செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களை கொள்வனவு செய்தல் மற்றும் பராதீனம் செய்தல் தொடர்பான தகவல்களை உள்ளீடு செய்து நிதியல்லா சொத்து முகாமைத்துவ தொகுதியை விரைவில் இஸ்தாபிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

| | | | |
|---|---|---|---|
| (ஊ) | 2023 ஆகஸ்ட் 09 திகதி அரச கணக்குகள் மீதான செயற்குழுவினால் வழங்கிய கட்டளை பிரகாரம் அலுவலத்தினால் NFAMS இற்கு தகவல்களை உள்ளீடு செய்ய ஒவ்வொறு சொத்துக்களிற்கும் நிகழ்நிலை (Online) தகவல் தொகுதியை செயற்படுத்தி பூரணப்படுத்த 2023 திசெம்பர் 31 முதல் 2025 திசெம்பர் 31 வரையான கால வீச்சளவினுள் கால சட்டகமொன்று முன்வைக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம், வாகன மொடியுலை 2023 செப்டம்பர் 01 இலிருந்து நடைமுறைப்படுத்தி 2023 திசெம்பர் 31 திகதியளவில் தகவல் தொகுதியை பூரணப்படுத்துவதாக குறிப்பிட்டிருந்த போதும், 2023 திசெம்பர் 31 திகதி வரை 110 அரச நிறுவனங்களின் வாகனங்கள் தொடர்பான தகவல்களை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. | NFAMS தொகுதியில் வாகன மொடியுலை செயற்படுத்தும் முன்னேற்றம் - அரச நிறுவனங்களின் (அரச நிறுவனம், பொது முயற்சிகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்கள்) தகவல் உள்ளீடு செய்யும் அலகுகளினால் (data entry points) 95% தகவல்கள் தற்போது அறிக்கையிடப்பட்டுள்ளதென. | தகவல்களை பெற்றுத்தராத அரச நிறுவனங்களிடம் இருந்து விரைவில் தகவல்களை பெற்று தொகுதியை நாளாதுவரையாக்க வேண்டும். |
| (எ) | கொம்ப்ட்ரோலர் நாயகம் அலுவலகத்தினால் அரசின் அனைத்து நிதியல்லா சொத்துக்கள் தொடர்பான மதிப்பீட்டு பெறுமதிகளையும் உள்ளடக்கி மத்தியப்படுத்திய ஆவணத்தை தயாரித்திருக்காத காரணத்தால் அரச கணக்குகளில் காண்பிக்கப்படும் நிதியல்லாத சொத்து மீதியின் சரியான தன்மையை உறுதி செய்து கொள்ள முடியவில்லை. | நிதியல்லா சொத்து முகாமைத்துவ தொகுதியின் (NFAMS) முதலாவது மொடியுலாக வாகன மொடியுலை செயற்படுத்தியுள்ளதுடன் ஏனைய நிதியல்லாத சொத்து மொடியுல்களை படிப்படியாக செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதென. | அரச கணக்குகளில் காண்பிக்கப்படும் நிதியல்லாத சொத்துக்களின் பெறுமதியை சரியாக பிரதிபலிக்க முடியுமானவாறு தொகுதியை தயாரிக்க விரைவில் நடவடிக்கை எடுக்க வேண்டியமை. |

### 3.2 பெறுகைகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| அரச நிறுவனங்களிற்கு அரச இலத்திரனியில் பெறுகைகள் தொகுதியை அறிமுகம் செய்வது தொடர்பான 2018 ஒக்டோபர் 23 | அரச துறை பெறுகைகள் பெறுகைகள் பணிகள், பெறுகைகள் வழிகாட்டிக் கோவை மற்றும் | சுற்றறிக்கை பிரகாரம் இலத்திரனியல் பெறுகைகள் தொகுதியை |

| | | |
|---|---|---|
| திகதிய இலக்கம் 05/2018 மற்றும் 2019 திசெம்பர் 17 திகதிய இலக்கம் 08/2019 கொண்ட அரச நிதி சுற்றறிக்கை பிரகாரம் அரச பெறுகைகள் நிறுவன பதிவு, இணைப்பு அலுவலர் பதிவு, வழங்குனர் பதிவு, வருடாந்த பெறுகைகள் திட்டத்தை சமர்ப்பித்தல், பெறுகைகள் அறிவித்தல் பகிரங்கப்படுத்தல், விலைகள் ஒப்பீட்டு முறைக்கு இலத்திரனியல் பெறுகை தொகுதியை பயன்படுத்துதல் போன்ற செயற்பாடுகள், அனைத்து அரச நிறுவனங்களினாலும் மேற்கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறாயினும், அலுவலகத்தினால் மேற்குறித்த சுற்றறிக்கை பிரகாரம் செயற்படாது 2023 ஆண்டில் 02 சந்தர்ப்பங்களில் இலத்திரனியல் பெறுகைகள் தொகுதியை பயன்படுத்தாது கூட்டுத் தொகை ரூபா 831,900 ஆன பண்டங்கள் விலைகள் ஒப்பீட்டு முறையில் பெறப்பட்டிருந்தன. | பெறுகைகள் நடைமுறை கோவை பிரகாரம் மற்றும் இடைநேர் விளைவான சுற்றறிக்கை பிரகாரம் மேற்கொள்ளப்படுவதுடன், 2024 ஆண்டில் வலை ஒப்பீட்டு முறையின் கீழ் மேற்கொள்ளப்படும் பெறுகைகள் இலத்திரனியல் பெறுகைகள் தொகுதியூடாக பெறுகைகள் செயற்பாடுகளை மேற்கொள்ள ஆரம்பித்துள்ளதென. | பயன்படுத்தி பெறுகைகள் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியமை. |

## 4. மனித வள முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) 2023 திசெம்பர் 31 இல் அலுவலகத்தின் 09 வெற்றிடங்கள் காணப்பட்டதுடன், அவ் வெற்றிடங்களிற்கு இடையே 06 சிரேஷ்ட மட்டத்திலான வெற்றிடங்கள் காணப்பட்டன. அது அங்கீகார பதவி எண்ணிக்கையில் 50 சதவீதமானது. | இந்த அலுவலகத்தின் செயற்பாடுகளை பேணிக் கொள்ள இந்த வெற்றிடங்களை நிரப்புவது தேவையாகும். இந்த வெற்றிடங்களை நிரப்புமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. | திணைக்கள கடமை பணிகளை மேற்கொள்வதற்காக அத்தியவசிய வெற்றிடங்களை நிரப்பி அல்லது அங்கீகார ஆளணினரை திருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். |